STC.No. 319/2023

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.03.2026**

**எ. ம.சா –1**

**பெயர் – சுரேஷ் த/பெ.வெங்கட்ராமன்,**

**முதல் விசாரணை தொடர்ச்சி**

1. திரு.செல்வகுமார் த/பெ. ரங்கநாதன் என்பவர் திருவண்ணாமலை மாவட்ட குற்றப்பிரிவு காவல் ஆய்வாளரிடம் கொடுத்த **கு.வி.மு.ச பிரிவு 161(3)ன் கீழான வாக்குமூலத்தின் உண்மை நகல் எ.சா.ஆ1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. கடந்த 14.02.2023 அன்று செஞ்சி துணை காவல் கண்காணிப்பபாளர் அலுவலகத்தில் நான் எனது Vivo F19 Pro செல்போன் மூலமாக சிட்டி யுனியன் வங்கியின் காசோலை எண்கள் 93 மற்றும் 94, 20ரூபாய் பத்திரம், சி. அண்ணாமலை பைனான்ஸ் என அச்சிடப்பட்ட பான்டு ஆகியவற்றில் பூர்த்தி செய்யாமல் நான் கையொப்பம் மட்டும் செய்திருந்தவற்றை புகைப்படம் எடுத்தேன். மேற்படி புகைப்படங்களை தற்போது நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ள பென்டிரைவ்வில் பதிவிறக்கம் செய்துள்ளேன். மேலும், மேற்படி பென்டிரைவ்வில் பழனியப்பன் என்பவர் பேசிய பதிவும் உள்ளது. **மேற்படி பென்டிரைவ் எ.ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. திருவண்ணாமலை மாவட்ட குற்றப்பிரிவு அலுவலகத்தில் நான் பழனியப்பன் , சரவணன் மற்றும் பிரபு ஆகியோர்கள் மீது கொடுத்த புகாரின் மீது பதியப்பட்ட குற்ற எண்.3/2024 என்ற **முதல் தகவல் அறிக்கையின் சான்றிட்ட நகல் எ.ம.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி குற்ற எண்ணிற்குண்டான இறுதி அறிக்கையின் சான்றிட்ட நகல் **எ.ம.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. அண்ணாமலை பைனான்சில் எனக்கு அளிக்கப்பட்ட தண்டல் புத்தகம் எண்.B234 என்பதின் சான்றிட்ட நகல் **எ.ம.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. திரு அருணகிரி த/பெ. கனகராஜ் என்பவர் திருவண்ணாமலை மாவட்ட குற்றப்பிரிவு காவல் ஆய்வாளரிடம் கொடுத்த **கு.வி.மு.ச பிரிவு 161(3)ன் கீழான வாக்குமூலத்தின்**

**உண்மை நகல் எ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. எதிர்மனுதாரர் தரப்பில் ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.

| |
|---|
| என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.<br>Sd/– B.Vidhya,<br>குற்றவியல் நீதித்துறை நடுவர்,<br>செஞ்சி. |